*புனரமைத்து, குடமுழுக்கு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு அஹோபில நரசிம்மருடைய ஆசி முழுமையாக இருப்பதால், இந்த ஆண்டே அந்தக் கோயிலினுடைய திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**129—**

## காலிப் பணியிடங்களை நிரப்புதல்

***1965—திரு. க. அன்பழகன்:**

*மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் சார் கருவூலத்தில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) கருவூலக் கணக்குத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பும்பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்*

*2022 ஏப்ரல் 19*]
தேர்வாணையம் TNPSC–க்கு கும்பகோணம் உட்பட அனைத்து இடங்களிலுமிருந்து 2016–2017, 2017–2018, 2018–2019, 2019–2020 மற்றும் 2020–2021 ஆகிய ஐந்து ஆண்டுகளுக்கான காலிப் பணியிட மதிப்பீட்டறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திலிருந்து மேற்காணும் பணியிடங்களுக்கான ஒதுக்கீடு பெறப்பட்டவுடன், கும்பகோணத்தில் உள்ள சார் கருவூலத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் பழமையான செயல்பாட்டுத் துறைகளில் இன்றியமையாதது கருவூல கணக்குத் துறை. 9½ இலட்சத்திற்கும் மேலான அரசுப் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல், 7.2 இலட்சத்திற்கும் மேலான ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் கருவூலத் துறையில் அதிக வருவாய் பரிவர்த்தனை செய்யும் கும்பகோணம் சார் கருவூலத்திற்கு ஒப்பளிக்கப்பட்டிருக்கிற 15 இடங்களில், 2 கணக்கர், 4 இளநிலை உதவியாளர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் என 7 பணியிடங்கள் காலியாக உள்ளன. இப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் நிரப்பப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மின்சார விளக்கு இன்னொரு மின்சார விளக்கை ஏற்ற முடியாது. ஆனால், ஒரு அகல் விளக்கால் 100, 1,000, 1,00,000 அகல் விளக்குகளை ஏற்றலாம். ஓர் அகல் விளக்காக இருக்கின்ற நம்முடைய மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு பம்ப் செட்டுகளை அகல் விளக்காக வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழக விவசாயிகளினுடைய மனதிலே நிரந்தர இடத்தைப் பிடித்திருக்கிறார். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற 243 சார் கருவூலங்களில் இருக்கின்ற காலிப் பணியிடங்களை நிரப்புவாரா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

[2022 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பலமுறை கூறியதுபோல, இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி அடிப்படைக் கொள்கையிலிருந்து ஆரம்பித்து, முழுமையாக ஒரு பிரச்சினையை ஆராய்ச்சி செய்து, அதில் அடுத்தடுத்து என்னென்ன காரணங்கள், எதற்காக இந்த மாதிரி ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து, இருக்கிற சட்டங்கள், விதிமுறைகள், G.O.–க்கள் எல்லாம் ஏற்கெனவே பின்பற்றப்படுகின்றனவா என்பதை அறிந்து, தேவையான அளவிற்குப் புதிதாக உருவாக்குவது எங்களுடைய முறை. அந்த அடிப்படையில் நான் பலமுறை கூறியிருக்கிறேன், பல ஆண்டுகளாக தேர்வாணையம் தேர்வை நடத்தவில்லை. அதில் சிலவற்றில் Corona problem, சிலவற்றில் ஏற்கெனவே Court–ல் நிறைய case நிலுவையில் இருந்தது. அதனால், வந்த விளைவுகள் இதெல்லாம். அதற்காகத்தான் அறிவித்திருக்கிறோம், ஒரு குழுவை அமைத்து, அதன்மூலம் 6 மாதங்களுக்குள் முழுமையாக மனித வள மேலாண்மைத் துறையின் recruiting, training, certification எல்லாவற்றையும் ஒழுங்காக திருத்துவதற்கான வழி காணப்படும்.

ஒரேயொரு உதாரணம் சொல்கிறேன். நிறைய இடங்களில் இருக்கிற விதிமுறை, ஓர் ஆண்டிற்குள் யாருமே transfer ஆகக் கூடாது. அப்போதுதான் continuity இருக்கும். அதேபோல மூன்று ஆண்டுகளுக்குமேல் யாருமே ஓர் இடத்தில் தொடர்ந்து இருக்கக் கூடாது. Nexus உருவாக்குவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். அதேபோல, promotion ஆகும்போது, ஒரு படியிலிருந்து அடுத்த படிக்குப் போனால், அதே இடத்தில் இருக்க முடியாது. ஏனென்றால், உங்கள்மீது வந்திருக்கிற புகாரை நீங்களே மேலாண்மை செய்வதற்கு வாய்ப்பு வரும். இதெல்லாம் உலகளவில் normal HR practice. ஆனால், இது பின்பற்றப்படுகிறதா என்றால், பல இடங்களில் இல்லை. அதனால்தான் முழுமையாகச் சீர்திருத்தம் செய்வதற்கு முயற்சி செய்திருக்கிறோம். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற பிரச்சினை குறித்து நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன்; மாநகரங்களில் பணியாற்றுவது சலுகையாக இருக்கிறது. ஆனால், அங்கெல்லாம் பணியிடங்கள் full ஆக இருக்கின்றன. புறநகர் அல்லது கொஞ்சம் தூரத்தில் குக்கிராமங்கள்

*2022 ஏப்ரல் 19*]

*இருக்கும். அங்கெல்லாம் நிறைய* vacancies *இருக்கின்றன. சராசரி* vacancy *35% என்றால், சில இடங்களில் 60%, சில இடங்களில்* zero *என்று இருக்கிறது. இதையெல்லாம் திருத்துவதற்காகத்தான் இந்தக் குழுவை அமைத்து, இதன்மூலம் அடிப்படை மாற்றத்தை இந்த ஆண்டிற்குள் கொண்டு வருவோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

*முற்பகல் 11–15*

**திரு. க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அரசுக் கருவூலங்களில் காலியாக உள்ள மொத்தப் பணியிடங்களில், கணக்கர் 684, எழுத்தாளர் 406, கண்காணிப்பாளர் 174, தட்டச்சர் 49, அலுவலக உதவியாளர்கள் 119 என உள்ளன. தஞ்சாவூரின் 8 சார் கருவூலங்கள், கும்பகோணத்தில் இருக்கின்றன. கும்பகோணம் வட்டாரத்தில் சுமார் 100 அரசு அலுவலகங்கள் உள்ளன. 3,200 அரசு ஊழியர்களின் சம்பளமும், சுமார் 6,000 ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியமும் சுமார் 15 முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு மாதந்தோறும் சுமார் ஒரு கோடி ரூபாய்க்குமேல் விற்பனையும் இதன்மூலம் ஆகின்றது. ஒரு மாவட்ட கருவூலத்திற்கு ஈடாக அனைத்துப் பணிகளும், பணபரிவர்த்தனையும் கும்பகோணம் சார்நிலை கருவூலத்தில் நடைபெறுகின்றது. நலிந்தோர் மற்றும் உதவி கேட்பவர்களுக்கு கருணைக் கரம் நீட்டும் கருணை உள்ளம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், சட்டமன்றத்திலேயே, கும்பகோணத்தை மாநகராட்சியாக அறிவித்ததை நினைத்து மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். கும்பகோணத்தை மாவட்டத் தலைமையிடமாக ஆக்குவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) இதோ ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். இந்த நிலையில், நம்முடைய மாண்பிற்கினிய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பாராட்டப்படுகின்ற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பாபநாசம், திருவிடைமருதூர், கும்பகோணத்தை இணைத்து கும்பகோணம் சார்நிலை கருவூலத்தை மாவட்டக் கருவூலமாக தரமுயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆட்சியில், முன்னாள் இருந்த ஆட்சியில் ஒரு குழு அமைக்கப்பட்டு, மனித வளம் எங்கே குறைவாக இருக்கிறது, எங்கே உயர்த்தலாம் என்பன குறித்து அறிக்கை வந்தது. காலத்திற்கேற்ப, புது தகவல் தொழில்நுட்பங்கள் வந்த பிறகு, பொதுவாக Government–லும், குறிப்பாக நிதித் துறையில் Integrated Financial and Human Resource Management System (IFHRMS) வந்த பிறகு, எத்தனைப் பணியிடங்கள் உண்மையிலேயே தேவை என்பதை அறிய முடிகிறது. இப்போது சம்பளமும், ஓய்வூதியமும் automatic ஆக வங்கியில் transfer ஆகி SMS மூலம் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்குத் தகவல் அனுப்பப்படுகிறது. Salary slips, TDS போன்றவற்றை நாம் online–ல் எடுத்துக்கொள்ள முடியும். காலத்திற்கேற்ப உண்மையிலேயே எத்தனைப் பணியிடங்கள் தேவை, அரசியலுக்கு அப்பாற்பட்டு, Government–க்கு அப்பாற்பட்டு, அவர்கள் ஆட்சியிலேயே எங்கெங்கெல்லாம், எப்படிச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரலாம் என்பன குறித்து சிறப்பான அறிக்கை வெளிவந்தது. ஏற்கெனவே சொன்னதுபோல, காலத்திற்கேற்ப, தேவைகளுக்கேற்ப, குறையில்லாமல் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும், அலுவலகங்களும் உருவாக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**130—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***15201—திரு. K.A. பாண்டியன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?